# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

# இரட்சிப்பும், பிரதிபலன்களும்

## முன்னுரை :

சில நாட்களுக்கு முன்பு ஒரு விசுவாசி கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அவர் மனத்தாழ்மையுள்ளவராயும், உயர்ந்த நற்குணங்கள் படைத்தவராகவும் இருந்தார். மரித்துப்போன இந்த விசுவாசியின் நண்பர் ஒருவர் இவ்விதமாக கூறியிருக்கிறார். அதாவது, ''மரித்துப்போன இவர் ஒருவேளை பரலோகத்தை அடையாமற்போவாரென்றால், என்னுடைய நிலைமை என்ன ஆகும்? பரலோகத்திற்கு போவேன் என்ற நம்பிக்கையே இல்லை.'' இவர் கூறியிருக்கிற வார்த்தையிலிருந்து ஒருவர் இவ்வுலகத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் அடிப்படையில்தான் பரலோகம் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது என்று அவர் எண்ணுவது புலப்படுகிறது. வாழ்க்கையின் அடிப்படையை வைத்து பரலோகம் கிடைக்கிறதா? அல்லது கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் தான் கிடைக்கிறதா? தேவனுடைய கிருபையினாலே கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் பரலோகம் கிடைக்கும் என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் உத்தம விசுவாசிகளுக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள் என்ன? அவைகளை எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? இரட்சிப்புக்கும், பிரதிபலன்களுக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக விளக்கி,மேலே கூறப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும். உத்தம கிறிஸ்தவ ஜீவியம் செய்வதன் மூலம் இப்பூமிக்குரிய நன்மைகள் கிடைக்கும் என்பதை விளக்கும் வகையில் இப்பாடம் எழுதப்படவில்லை. ஆனால் தேவனுடைய ஒப்பற்ற கிருபையினால் பரலோகமும், இரட்சிப்பும் இலவசமாகக் கிடைக்கிறது என்பதையும், மேலும் தெய்வ பக்தியுள்ள எந்த ஒரு விசுவாசியும் தேவனுடைய கரத்திலிருந்து பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதையும் விளக்கும் வகையில் இப்பாடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

பாவத்திலிருந்து கிடைக்கும் இரட்சிப்பானது தேவனுடைய கிருபையினாலே இலவசமாக கிடைக்கும் ஒன்றாகும். இவ்வுலகத்தில் நீதிமானாக அல்லது பரிசுத்தவானாக வாழ்வதன் மூலம் இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ள முடியாது. எபேசியர் **2:9–ல்** ''ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' என்று வாசிக்கிறோம். **1** கொரிந்தியர் **9:25–ல்** ''. . . நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியிருக்கிறார். விசுவாசிகளுக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள் எதிர்காலத்தில் கிடைக்கக் கூடியதாய் இருக்கிறது என்பதை வேதத்தின் மூலம் நாம் தெளிவாக அறிந்துகொள்கிறோம். விசுவாசிகள் அனைவரும் விசுவாசம்–கிரியை, நியாயப்பிரமாணம்–கிருபை, இரட்சிப்பு–பிரதிபலன்கள் இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. மனிதனுடைய நற்பண்புகளின் அடிப்படையில் அல்ல, கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லா மனிதருக்கும் தேவனுடைய கிருபையினாலே இரட்சிப்பு இலவசமாக அளிக்கப்படுகிறது. இலட்சக்கணக்கான பெயர்க்கிறிஸ்தவர்கள் பயத்திலும், நம்பிக்கையற்ற நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பரிசுத்தத் தன்மையை அடையாததினாலே இரட்சிப்பு அல்லது பரலோகம் கிடைக்காது என்பது பெயர்க் கிறிஸ்தவர்களின் கருத்து. தேவன் தம்முடைய கிருபையினாலே சம்பாதித்த இரட்சிப்பில் உங்களுக்கு பயமும், நம்பிக்கையற்ற நிலையும் இருக்குமானால் இப்பாடம் அவற்றை நிவர்த்தி செய்யக்கூடியதாக அமையும் என்பதே எங்களது நம்பிக்கையும், விருப்பமும் ஆகும்.

### பாடம்

## I. இரட்சிப்பு என்றால் என்ன?

அ. கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் உள்ளடங்கிய பெரிய வார்த்தை 'இரட்சிப்பு' ஆகும். இரட்சிப்பு என்ற வார்த்தை பாவத்திலிருந்து கிடைக்கும் மீட்போடு தொடர்புடைய எல்லாப் போதனைகளையும் தழுவக்கூடியதாய் இருக்கிறது. உதாரணம் : மீட்பு, நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், மன்னிக்கப்படுதல், கிருபாதாரபலி, சுமத்துதல், ஒப்புரவாகுதல், சுவீகாரம்.

ஆ. 'இரட்சிப்பு' என்ற வார்த்தை **சோட்டீரியா** (SOTERIA) என்ற கிரேக்கு வார்த்தையிலிருந்து வந்தது. இந்த வார்த்தையின் அடிப்படைப் பொருள் **'விடுதலை'** அல்லது **'பாதுகாப்பு'** என்பதாகும். சோட்டீரியோஸ்

'SOTERIOS' என்ற மற்றொரு கிரேக்கு வார்த்தை பெயருரிச் சொல்லாகும். இந்த வார்த்தையின் அடிப்படைப்பொருள் **"இரட்சிப்பு"** அல்லது **"இரட்சிப்பைக் கொண்டுவருகிற"** என்பதாகும்.

இ. வேதத்தில் இரட்சிப்பு என்ற வார்த்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது:

1. 'நித்திய இரட்சிப்பு'க்கு காரணராகிய கிறிஸ்து என்பதைக் குறிக்கும் வகையில் இரட்சிப்பு என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது (எபிரெயர் 9:25). மேலும் 'பாவிகளின் இரட்சகர்' என்பதைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 2:30; 19:10).
2. விரோதிகள், ஆபத்துக்கள் போன்றவற்றிலிருந்து விடுதலை என்பதை விவரிக்கும் வகையில் 'இரட்சிப்பு' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு உள்ளது. "நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" (யாத்திராகமம் 14:13).
3. சுவிசேஷத்தின் கருத்தை அறிந்துகொள்ளும் வகையில் இரட்சிப்பு என்ற வார்த்தைப் பயன்படுத்தப் பட்டுள்ளது. எபேசியர் 1:13–ல் "உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். 'சுவிசேஷம்' என்ற வார்த்தையின் பொருள் 'நற்செய்தி' ஆகும். பாவத்தண்டனையிலிருந்தும், வல்லமையிலிருந்தும் விடுதலை என்பதைக் கூறும் செய்தியே நற்செய்தி ஆகும்.
4. அப்போஸ்தலர் 4:12 "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை".
5. தீத்து 2:11, "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி." தேவனுடைய கிருபை இரட்சிப்பை நமக்குக் கொண்டுவந்திருக்கிறது.
6. சுவிசேஷத்தை கேட்பதன் மூலம் இரட்சிப்பு வருகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனா யிருக்கிறது (ரோமர் 1:16).
7. இரட்சிப்பு என்பது கிறிஸ்தவர்கள் தெரிவிக்கவேண்டிய ஒன்றாயிருக்கிறது (சங்கீதம் 96:2; பிலிப்பியர் 2:12).
8. கஷ்டத்திலிருந்து தற்காலிகமான, இயற்கையான விடுதலை என்பதைக் குறிக்கும் வகையில் இரட்சிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பிலிப்பியர் 1:19–ல் "எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்" என்று பவுல் கூறியிருக்கிறார்.
9. பாவத்தின் தண்டனை, வல்லமை, பிரசன்னம் முதலியவற்றிலிருந்து ஆவிக்குரிய, நித்திய விடுதலை தேவனாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மனந்திரும்பி கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கிற யாவருக்கும் தேவன் விடுதலை கொடுக்கிறவராய் இருக்கிறார் (அப்போஸ்தலர் 4:12; ரோமர் 10:10; எபேசியர் 1:13; 1 தெசலோனிக்கேயர் 5:9; எபிரெயர் 9:28).

இப்பாடத்தைத் தொடர்ந்து நீங்கள் படிக்கும்பொழுது 'இரட்சிப்பு' என்ற வார்த்தை இன்னும் அநேக இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டுகொள்வீர்கள். மேலே குறிக்கப்பட்டுள்ள வசனங்கள் இரட்சிப்பு என்ற வார்த்தையின் அடிப்படைப் பொருளைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது என்பதை நாம் காணலாம்.

## II. இரட்சிப்பு சாத்தியமாவது எப்படி?

அ. முதலாவது, நமது மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய காரியம் : "பாவத்திலிருந்து நமக்கு கிடைக்கும் இரட்சிப்பானது தேவனால் இவ்வுலகம் உருவாவதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும்."

1. எபேசியர் 1:4, "அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்."
2. ரோமர் 8:29, ". . . தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்."
3. 1 பேதுரு 1:19,20, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராய் இருந்து"
4. கலாத்தி.4:5, "காலம் நிறைவேறின பொழுது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்."
5. 2 தெசலோனிக்கேயர் 2:13, ". . . நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டார்."

ஆ. இரண்டாவது "இரட்சிப்பு என்பது தேவனால், தேவனுடைய ஒப்பற்ற கிருபையின் மூலம் உண்டானது" என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு. இதை ஒரு மனிதனும் தன்னுடைய முயற்சியினாலோ அல்லது கிரியையினாலோ சம்பாதித்துக்கொள்ள அல்லது பெற்றுக்கொள்ள முடியாது.

1. தீத்து 2:11, "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க **தேவகிருபை** பிரசன்னமாகி இருக்கிறது".
2. தீத்து 3:5, "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது **இரக்கத்தின் படியே. . .** நம்மை இரட்சித்தார்".
3. எபேசியர் 2:4,5, "**தேவனோ** இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே. . . நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம்".
4. எபேசியர் 2:8,9, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

இ. கடைசியாக, கிறிஸ்து நம்முடைய பாவத்திற்காக கல்வாரி சிலுவையில் சிந்திய தம்முடைய பரிசுத்த இரத்தத்தின் மூலமாக நமக்கு இரட்சிப்பு சாத்தியமாகிறது.

1. கலாத்தியர் 2:20, ". . . என்னில் அன்புகூர்ந்து **எனக்காகத்** தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். . ."
2. எபிரெயர் 9:28, "கிறிஸ்துவும் **அநேகருடைய பாவங்களைச் சுமந்துதீர்க்கும்படிக்கு** ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பைஅருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்."
3. தீத்து 2:14, "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களின்று மீட்டுக் கொள்ளும்படியாக **நமக்காகத்** தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்."
4. கலாத்தியர் 1:4, "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி. . . நம்முடைய பாவங்களுக்காகத் **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.**"
5. ஏசாயா 53:6; 2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 2:24 ஆகிய வசனங்களையும் வாசித்துப்பார்க்கவும்.

## III. எல்லா விசுவாசிகளும் தேவன் இரட்சிப்பை இலவசமாக எல்லா மனிதருக்கும் அளிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இதை மறுக்கமுடியாது.

இரட்சிப்பை இலவசமாக எல்லா மனிதருக்கும் கொடுப்பதற்குத் தேவன் சித்தம் கொண்டவராய் இருக்கிறார் என்பதை வேதம் தெளிவாகப் போதிக்கிறது.

1. ஏசாயா 45:22, "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்."
2. 1 தீமோத்தேயு 2:3,4, "நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், பிரியமுமாய் இருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்."
3. தீத்து 2:11, "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி இருக்கிறது."
4. வெளி.22:17, ". . . விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்."
5. யோவான் 3:16,17; அப்போஸ்தலர் 2:21, 10:43, 17:30; ரோமர் 10:13 இந்த வசனங்களையும் வாசித்துப் பார்க்கவும்.

## IV. இரட்சிப்பைப் பெறுவது எப்படி?

அ. இப்பெரிதான இரட்சிப்பை மனிதனுடைய சுயநீதியினாலே சம்பாதித்துக்கொள்ள முடியாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

1. எல்லா மனிதரும் குற்றமுடையவர்களாகவும், தேவனுடைய கிருபைக்குத் தகுதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.
   - i) ஏசாயா 64:6, "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. . ."
   - ii) ரோமர் 3:9–12,19, "யூதர், கிரேக்கர் யாவரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை." உலகத்தார் யாவரும் தேவனுக்கு முன்பாகக் குற்றமுடையவர்களாய் இருக்கிறார்கள்.
2. இரட்சிப்பு முழுவதும் தேவனுடையது. அதை தேவன் மனிதனுடைய சுயநீதியின் அடிப்படையில் அல்ல, தம்முடைய கிருபையினாலேயே இலவசமாக மனுஷருக்கு அருளுகிறார்.

i) தீத்து 2:11 –"எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி இருக்கிறது."

ii) ரோமர் 5:15–"தேவனுடைய கிருபையும், இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர் மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது."

iii) எபேசியர் 2:8,9–"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல."

iv) தீத்து 3:5–"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே நம்மை இரட்சித்தார்."

ஆ. மனந்திரும்பி கர்த்தராகிய கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் எந்த ஒரு மனிதனும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். பாவத்திற்குரிய தண்டனை எல்லாவற்றையும் கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே ஏற்று தீர்த்துவிட்டார். நமது பாவத்திற்குரிய கடன் செலுத்தப்பட்டபடியினாலே தேவனுடைய நீதி நிறைவேற்றப்பட்டது. அதில் அவர் திருப்தியடைந்தார், சாத்தானுடைய வல்லமை நசுக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் நிறைவேற்றப் பட்டு அதனுடைய சாபம் தொலைக்கப்பட்டது. கல்வாரி சிலுவையிலே கிறிஸ்து "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி தம் ஜீவனை விட்ட பொழுது மனிதனுக்குரிய மீட்பை முழுவதுமாக சம்பாதித்து விட்டார். எனவே இப்பொழுது தேவன், கிறிஸ்துவின்மேல் வைக்கும் எளிய விசுவாசத்தின் அடிப்படையில் மனிதனுக்கு இரட்சிப்பை இலவசமாகக் கொடுக்க முடியும்.

1. எபேசியர் 2:8, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு."
2. கலாத்தியர் 2:15, "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம்."
3. கலாத்தியர் 3:22, "இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாச முள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது."
4. ரோமர் 4:5, "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனா யிருந்தால் அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்."
5. ரோமர் 3:28, "ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்."
6. கீழ்க்கண்ட வசனங்களையும் வாசித்துப் பார்க்கவும்.
   ரோமர் 3:22–24, 10:9,10; அப்போஸ்தலர் 13:39, 16:31; எபிரெயர் 11:6; யோவான் 3:16, 36.

## V. பிரதிபலன்கள் என்றால் என்ன?

விசுவாசிகள் இவ்வுலகத்தில் கிறிஸ்துவை உண்மையாய் சேவிப்பதன் மூலம் பரலோகத்தில் அவருடைய கரத்தில் இருந்து நித்தியமான மரியாதை, மேன்மை, நற்பெயர், கௌரவம் இவைகளை பெற்றுக்கொள்வதாகும். இதற்கு பிரதிபலன்கள் என்று பெயர். உண்மையாய் கர்த்தரைச் சேவிப்பவர்களுக்கு பிரதிபலன்களை கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பூமியிலுள்ள மேன்மை, ஆஸ்தி, இவைகளை அல்ல பரலோகத்தில் உள்ள மேலானவை களை நாட நம்மை உற்சாகப்படுத்தும் வகையில் இந்தப் பிரதிபலன்கள் கொடுக்கப்படுகிறது. மேலும் நம்முடைய பணியிலும், வாழ்க்கையிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்கத் தூண்டும் வகையில் இவைகள் கொடுக்கப்படுகிறது. **கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைக் கவனிக்கவும் :**

1. எபிரெயர் 11:26, "மோசே, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."
2. 2 கொரிந்தியர் 4:17, "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது."
3. கொலோசெயர் 3:23, "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்."
4. மத்தேயு 5:12, ". . . பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்."
5. 1 கொரிந்தியர் 3:8, ". . . அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்."

6. மத்தேயு 10:41,42, ''தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான். நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன் நீதிமானுக் கேற்ற பலனை அடைவான். சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்த சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்.''
7. 1 கொரிந்தியர் 3:14, ''அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்.''

## VI. பிரதிபலன்கள் யாருக்கு கொடுக்கப்படுகிறது?

1. இயேசுகிறிஸ்துவாகிய அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் இவைகளால் யார் கட்டுகிறார்களோ அவர்களுக்குப் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (1 கொரிந்தியர் 3:11–14).
2. தேவனுடைய பணியில் உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரர்களுக்கு பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (மத்தேயு 25:21, லூக்கா 19:17).
3. சோதனையைச் சகிக்கிறவர்களுக்குப் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (யாக்கோபு 1:12).
4. தேவனுடைய மந்தையை உண்மையாய் மேய்ப்பவர்களுக்குப் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் ( 1 பேதுரு 5:2–4).
5. தேவனை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்குப் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (எபிரெயர் 11:6).
6. ஆத்ம ஆதாயம் செய்பவர்களுக்கு பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (தானியேல் 12:3, 1 தெச. 2:19).
7. நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்களுக்குப் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (2 தீமோத்தேயு 4:7.8).
8. உண்மையாய் நடுகிறவர்களுக்கும், நீர்பாய்ச்சுகிறவர்களுக்கும் பிரதிபலன்கள் கொடுக்கப்படும் (1 கொரிந்தியர்3:5–8).

<u>குறிப்பு :</u>

சங்கீதம் 19:11–ல் இவ்விதமாக வாசிக்கிறோம்: ''அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.'' ''வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே'' என்று 1 தீமோத்தேயு 5:18–ல் வாசிக்கிறோம். உண்மையுள்ள ஜீவியம் செய்வதற்கு பிரதிபலன்கள் உண்டு. அதைக்குறித்து கேள்வியே இல்லை. கிறிஸ்துவை உண்மையாய் சேவிப்பதன் மூலம் பிரதிபலன்கள் கிடைக்கிறது. இப்பாடத்தில், பரலோகத்தில் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பெறக்கூடிய பிரதிபலன்களைக் குறித்து படித்து வருகிறோம் என்பதை உங்களுக்கு மறுபடியும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மறுபிறப்படைந்த விசுவாசிகள் மட்டுமே பிரதி பலன்களை பெறமுடியும். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டு, உண்மையாய் கர்த்தருக்கென்று ஜீவிப்பவர்கள் பிரதிபலன்களைப் பெறுவார்கள்.

## VII. பிரதிபலன்கள் எப்பொழுது, யாரால் கொடுக்கப்படும்?

'இரட்சிப்பு' என்பது கடந்தகால, நிகழ்கால, வருங்கால ஆகிய இம்மூன்று காலங்களையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது. இருப்பினும் விசுவாசிகள் இப்பொழுது இரட்சிப்பை வாழ்க்கையில் அனுபவிக்கிறோம். மாறாக, 'பிரதிபலன்கள்' என்பது எதிர்காலத்தில் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பெறக்கூடிய ஒன்றாகும்.

அ. 2 கொரிந்தியர் 5:10–''ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்''.

ஆ. 1 கொரிந்தியர் 3:13–15, ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும், நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில், அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும், அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ள தென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான், ஒருவன் கட்டினது வெந்து போனால் அவன் நஷ்டமடைவான், அவனோ இரட்சிக்கப்படுவான், அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.''

<u>குறிப்பு :</u>

விசுவாசிகள் மட்டுமே கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படுவார்கள். சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிற்பாடு மத்திய வானத்தில் இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறும். வெள்ளைச்சிங்காசனத்திற்கு முன்பாக அவிசுவாசிகள் மட்டுமே வெளிப்படுவார்கள். ஆயிரவருட அரசாட்சிக்குப் பிற்பாடு இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறும் (வெளி.20:11–15). எனவே, இந்த இரண்டு நியாயத்தீர்ப்புகளுக்கும் உள்ள வேறுபாட்டை மனதில் கொள்ளவேண்டும்.

இ. மத்தேயு 16:27, ‘‘மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.’’

ஈ. லூக்கா 6:23, ‘‘அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.’’

உ. 1 தெசலோனிக்கேயர் 2:19,‘‘எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்.’’

ஊ. வெளி. 22:12–‘‘இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.’’

**குறிப்பு :**

மேற்கண்ட வசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளக்கூடிய காரியம் விசுவாசிகளுக்கு பரலோகத்தில் பிரதி பலன்கள் கொடுக்கப்படும் என்பதே. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக இவைகள் கொடுக்கப்படும். கிறிஸ்துவே பிரதிபலன்களைக் கொடுப்பவராக இருக்கிறார்.

## VIII. எவ்வகையான கிரீடங்கள் பெறமுடியும்?

ஐந்து வகையான கிரீடங்களை விசுவாசிகள் பரலோகத்தில் பெறமுடியும் என்று வேதத்தில் பார்க்கிறோம்.

**அ. ஆத்ம ஆதாயம் செய்பவர்களுக்குக் கிடைக்கும் கிரீடம் :**

1. தானியேல் 12:3, ‘‘அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்.’’
2. 1 தெசலோனிக்கேயர் 2:19, ‘‘எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்.’’

**குறிப்பு :**

பரலோகத்தில் நமது மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்களைப்பார்க்கும் பொழுது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும். ஆத்ம ஆதாயமே செய்யாத விசுவாசிகளைப் பரலோகத்திலே பார்ப்பது எவ்வளவு துக்கமான காரியம்.

**ஆ. ஓட்டத்தை ஓடி முடிப்பவர்களுக்குக் கிடைக்கும் கிரீடம் :**

1. 1 கொரிங்தியர் 9:24–27–‘‘பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.’’

**குறிப்பு :**

விதிமுறைகளுக்கு ஏற்ப ஓட்டத்தை ஓடி முடிக்கும் கிறிஸ்தவர்களுக்கு இக்கிரீடம் கொடுக்கப்படும். இவர்கள் தங்களது சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவது மட்டுமல்லாமல் நல்ல பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். ‘‘மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்’’ (2 தீமோத்தேயு 2:5).

**இ. நல்ல போராட்டத்தை போராடினவர்களுக்குக் கிடைக்கும் கிரீடம்:**

1. 2 தீமோத்தேயு 4:7,8–‘‘நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.’’

**குறிப்பு :**

நீதியின் கிரீடத்தைப் பெறுவதற்கு ஒரு விசுவாசி நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். வசனம் 8–ல் அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவரும் நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொள்வார்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார்.

**ஈ. சோதனையை சகிக்கிறவர்களுக்குக் கிடைக்கும் கிரீடம் :**

1. யாக்கோபு 1:12–''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.''

**குறிப்பு :**

தங்களுக்கு நேரிட்ட பாடுகளிலும், சோதனைகளிலும் உண்மையாய் கர்த்தருக்கென்று நிலைத்து நின்றவர்களுக்கு ஜீவகிரீடம் கொடுக்கப்படும் (வெளி. 2:10; பிலிப்பியர் 4:13; ரோமர் 8:37; 2 கொரிந்தியர் 2:14 இந்த வசனங்களை வாசிக்கவும்).

**உ. மேய்ப்பர்களுக்குக் கிடைக்கும் கிரீடம் :**

1 பேதுரு 5:4–''அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.''

**குறிப்பு :**

தேவனுடைய மந்தையை கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்கிறவர்களுக்கு மகிமையுள்ள வாடாத கிரீடம் கொடுக்கப்படும். வெளி. 4:4,10–''இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாக விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்தார்கள்.'' கிறிஸ்துவின் மகிமைக்கு முன்பாக இருபத்துநான்கு மூப்பர்களும் தங்களுடைய தகுதியின்மையை உணர்ந்து கொள்வதாக இவ்வசனம் தெரிவிக்கிறது.

## IX. இரட்சிப்புக்கும், பிரதிபலன்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் :

| | |
|---|---|
| 1. இழந்துபோனவர்களுக்கு இரட்சிப்பு வழங்கப்படுகிறது | 1. இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பிரதிபலன்கள் வழங்கப்படுகிறது |
| 2. இரட்சிப்பு என்பது முற்றிலும் இலவசம் | 2. சீஷத்துவத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது |
| 3. கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு உண்டு | 3. கிரியையினால் மட்டுமே பிரதிபலன்கள் உண்டு |
| 4. இரட்சிப்பு என்பது நிகழ்காலத்தில் கிடைக்கும் | 4. எதிர்காலத்தில் மட்டுமே பிரதி பலன்கள் அனுபவிக்கக்கூடியதாய் இருக்கிறது |
| 5. இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் | 5. பிரதிபலன்களை சம்பாதிக்கவேண்டும் |
| 6. தேவனுடைய தயவினாலே இரட்சிப்பு கிடைக்கிறது | 6. விசுவாசியின் உண்மையின் அடிப்படையில் பிரதி பலன்கள் கிடைக்கிறது |
| 7. இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு | 7. பிரதிபலன்கள்என்பது கிறிஸ்துவினிடத்திலிருந்து கிடைக்கும் மேன்மை, புகழ், நற்பெயர் போன்றவைகளாகும் |

**முடிவுரை :**

'இரட்சிப்பு' என்பது பாவிகளுக்கு மட்டுமே என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பிரதிபலன்கள் விசுவாசிகளுக்கு மாத்திரமே கிடைக்கக்கூடியதாகும். இரட்சிக்கப்படுவதற்கு நாம் கிரியை செய்வதில்லை. நாம் இரட்சிக்கப்பட்ட படியினாலே கிரியை செய்கிறோம். கிறிஸ்தவம் என்பது கிரியை செய்யக் கூறும் மதம் அல்ல. ஆனால் கிரியை செய்யும் வாழ்க்கையாகும். பரலோகத்தை நம்முடைய முயற்சியினாலே சம்பாதித்துக் கொள்ள முடியாது. ஆனால் இரட்சிக்கப்படுகிறவர் களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு இடமே பரலோகமாகும் (எபிரெயர் 1:14; ரோமர் 8:17; கலாத்தியர் 3:29).

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இரட்சிப்பும், பிரதிபலன்களும்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

1. பரலோகம் யாருக்கு கிடைக்கும் என்று வேதம் கூறுகிறது?
   a. நல்ல ஜீவியம் செய்பவர்களுக்கு
   b. அனைவருக்கும்
   c. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு
2. பிரதிபலன்களைப் பெறுவது யார்?
   a. விசுவாசிகள் அனைவரும்
   b. உண்மையாய் கர்த்தரைச் சேவிப்பவர்கள்
   c. தேவனுக்கு சிறப்பான பணி செய்பவர்கள்
3. இரட்சிப்பு என்ற வார்த்தையின் அடிப்படைப் பொருள் என்ன?
   a. பாவமன்னிப்பு
   b. சுமத்துதல்
   c. விடுதலை
4. தேவன் நமது இரட்சிப்பை எப்பொழுது திட்டம் பண்ணினார்?
   a. பாவம் பிரவேசித்தது முதல் நடந்த சம்பவங்கள்
   b. உலகம் உருவாவதற்கு முன்பே
   c. இயேசு கிறிஸ்துவை அனுப்பியபொழுது
5. கிறிஸ்துவின் மரணத்தைப் பொருத்தமட்டில், 'பதிலாள்' என்ற வார்த்தையின் பொருள் என்ன?
   a. எனது இடத்தில்
   b. எனக்குப் பதிலாக
   c. அநேகருக்காக
6. கிறிஸ்துவின் மரணத்தைப் பொருத்தமட்டில்,'பிரதிநிதி' என்ற வார்த்தையின் பொருள் என்ன?
   a. எனது இடத்தில்
   b. எனக்குப் பதிலாக
   c. அநேகருக்காக
7. கிறிஸ்துவின் பலிமரணத்தின்மூலம் இரட்சிப்பு சாத்தியமாயிற்று என்று காண்பிக்கும் வசனம் எது?
   a. கலாத்தியர் 2:20
   b. எபேசியர் 1:4
   c. கலாத்தியர் 4:4
8. இரட்சிப்பு யாருக்குக் கிடைக்கும்?
   a. ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு
   b. அனைவருக்கும்
   c. நீதியுள்ள வாழ்க்கை வாழ்பவர்களுக்கு

9. இரட்சிப்பைப் எதன் மூலம் பெறலாம்?

a. ஞானஸ்நானம் b. விசுவாசம் c. நற்கிரியைகள்

10.பாவத்திற்கு விலைக்கிரயம் செலுத்தியது யார்?

a. கிறிஸ்து

b. முகம்மது

c. இரண்டு நபர்களும்

11. நமது பாவத்திற்காக செலுத்தப்பட்ட கிரயம் எது?

a. ஞானஸ்நானம்

b. பணம்

c. கிறிஸ்துவின் சிலுவை மரணம்

12.இந்த பாடத்தின்படி, பிரதிபலன்கள் என்பது என்ன?

a. அந்நிய பாஷை பேசும் வரம்

b. பூமியில் ஆண்டவரை உண்மையாக சேவித்ததற்கு பரலோகத்தில் கிடைக்கும் பலன்

c. சுகமளிக்கும் மற்றும் தீர்க்கதரிசன வரம்

13.தேவன் எதற்கு பிரதிபலன்களைக் கொடுக்கிறார்?

a. அவருக்கு சேவை செய்ததற்காக கூலி கொடுக்கிறார்

b. விசுவாசிகள் அவருக்கு நாம் உண்மையாய் ஊழியம் செய்யும்படி

c. பரலோகில் நமக்குப் பெரிய பதவியைக் கொடுப்பதற்கு

14.பிரதிபலன்கள் எப்பொழுது கொடுக்கப்படும்?

a. மரணத்தில்

b. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது

c. ஆயிர வருட அரசாட்சியில்

15.வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு யாருக்கு?

a. விசுவாசிகள்

b. அவிசுவாசிகள்

c. சாத்தானும் அவனது தூதர்களும்

**16.** பொருத்துக :– கீழே உள்ள வசனங்களில் 'இரட்சிப்பு' என்ற வார்த்தை எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| -------- | கிறிஸ்துவே நித்திய இரட்சிப்புக்கான ஆதாரம் | a. எபேசியர் 1:13 |
| -------- | ஆபத்திலிருந்து விடுதலை | b. அப்போஸ்தலர் 4:12 |
| -------- | சுவிசேஷத்தை அடையாளம் கண்டு கொள்ள | c. யாத்திராகமம் 14:13 |
| -------- | கிறிஸ்துவே இதற்கு ஆதாரம் என்பதைக் காண்பிக்க | d. தீத்து 2:11 |
| -------- | பிரசங்கத்தின் மூலம் எப்படி தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க | e. எபிரெயர் 5:9 |
| -------- | தேவ கிருபையால் நமக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் காண்பிக்க | f. ரோமர் 1:16 |

17. பொருத்துக :– பிரதிபலன்கள் யாருக்கு கொடுக்கப்படும்? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| --------- | கிறிஸ்துவை அஸ்திபாரமாக வைத்து பணி செய்வது | a. மத்தேயு 25:21 |
| --------- | உத்தமமும், உண்மையுமுள்ள உக்கிராணக்காரர்கள் | b. தானியேல் 12:3 |
| --------- | சோதனையை சகிப்பவர்கள் | c. 2 தீமோத்தேயு 4:7,8 |
| --------- | தேவனுடைய மந்தையை உண்மையாக மேய்ப்பவர்கள் | d. 1 கொரிந்தியர் 3:11–14 |
| --------- | ஆத்துமாக்களை ஆதாயம் செய்பவர்கள் | e. 1 பேதுரு 5:2–4 |
| --------- | நல்ல போராட்டம் போராடுபவர்கள் | f. யாக்கோபு 1:12 |

**18.** பொருத்துக :– ஆண்டவர் கொடுக்கும் 5 கிரீடங்கள் எவை? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| --------- | ஆத்ம ஆதாயம் செய்பவர்களுக்கு | a. அழிவில்லாத கிரீடம் (1 கொரிந்தியர் 9:24–27) |
| --------- | ஓட்டத்தை ஓடி முடிப்பவர்களுக்கு | b. ஜீவ கிரீடம் (யாக்கோபு 1:12) |
| --------- | நல்ல போராட்டத்தை போராடினவர்களுக்கு | c. மகிமையுள்ள வாடாத கிரீடம் (1 பேதுரு 5:4) |
| --------- | சோதனையை சகிக்கிறவர்களுக்கு | d. நீதியின் கிரீடம் (2 தீமோத்தேயு 4:7,8) |
| --------- | மேய்ப்பர்களுக்கு | e. மகிழ்ச்சியின் கிரீடம் (தானியேல் 12:3) |

19. கோடிட்ட இடத்தில் சரியான வார்த்தையை நிரப்பி வாக்கியத்தை நிறைவு செய்யவும் :

எபேசியர் 2:8,9 வசனங்கள் நமது இரட்சிப்பு --------------------என்றும், இது--------------------
உண்டானது அல்லவென்றும் நமக்குக் காண்பிக்கிறது.

20. இரட்சிப்பின் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைக்கு எதிரிடையாக பிரதிபலன்கள் (வெகுமதிகள்) பகுதியில் பூர்த்தி செய்யவும் :

| இரட்சிப்பு | பிரதிபலன்கள் |
|---|---|
| a. இழந்துபோனவர்களுக்கு வழங்கப்படுகிறது | ------------------------------- |
| b. கிருபையினால் மட்டும் | ------------------------------- |
| c. நிகழ்காலத்தில் அனுபவிக்கக் கூடியதாய் இருக்கிறது | ------------------------------- |

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________